

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

---

### முகக் கவசம், உயிர்கவசம்

**இன்று பிலவ ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆம் நாள்**

**2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் சனிக்கிழமை**

**குறள் எண் : 23**

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

**குறள் விளக்கம்**

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.

பழமொழி ( Proverb )

*Look before you leap*

ஆழம் தெரியாமல் காலை விடாதே

பொன்மொழி

வேறு வழியே இல்லையெனும் போது வரும் தைரியத்திற்கு பலம் அதிகம்.

இரண்டொழுக்க உறுதி மொழி

1. கல்வி கற்பது எனது அடிப்படை உரிமை.
2. சிறப்பாய் கல்வி கற்பது எனது கடமை

இன்றைய பொது அறிவு வினா விடை

1. இந்திய மாநிலங்களுள் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம் - உத்திரபிரதேசம்
2. இந்திய மாநிலங்களுள் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலம் - சிக்கிம்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

*Raise your hand*

உங்கள் கையத் தூக்குங்கள்

*Write with pencil*

பென்சிலால் எழுதுங்கள்

### வரலாற்றில் இன்று :

- இந்திய கவிஞர் சுப்பிரமணிய பாரதி பிறந்த தினம்(1882)
- இந்திய முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பிறந்த தினம்(1935)
- இந்திய செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த் பிறந்த தினம்(1969)
- யூனிசெப் நிறுவனம் அமைக்கப்பட்டது(1946)
- கர்நாடக இசைக் கலைஞர் எம்.எஸ்.சுப்புலட்சுமி இறந்த தினம்(2004)

### இன்றைய செய்திகள்

- தமிழகத்தில் பல மாதங்களுக்குப் பிறகு 2ஆவது நாளாக கரோனா பாதிப்பு 700-க்கும் கீழ் குறைந்தது.
- பாரதியாரின் 140ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக அரசு சார்வில் அவரது திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மறைந்த முப்படைத் தலைமை தளபதி விபின் ராவத்தின் பெயரை உத்தரகண்ட் மாநிலத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் பல்கலைக்கழகத்திற்கு சூட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.
- ஹெலிகாப்டர் விபத்தில் பலியான முப்படைத் தலைமை தளபதி விபின் ராவத் மற்றும் அவரது மனைவி மதுலிகா ராவத்தின் உடல்கள் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.
- அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் ஆகியவை பதிவு செய்யப்பட்ட கருவிகளுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பாட வேண்டும் என தமிழக அரசு சார்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.